# யூன் – 08 – வெள்ளி

## இயேசுவின் திரு இருதயம்

**கடவுள் ஊழி காலமாகக் கொண்டிருந்ததிட்டத்தைநம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வழியாய் நிறைவேற்றினார்.” எபே. 3:11**

### முதல் வாசகம் : ஓசே 11 : 1, 3-4, 8 – 9

இஸ்ரயேல் குழந்தையாய் இருந்தபோது அவன்மேல் அன்பு கூர்ந்தேன் எகிப்திலிருந்து என் மகனை அழைத்து வந்தேன்.ஆனால் எப்ராயிமுக்கு நடைபயிற்றுவித்தது நானே. அவர்களைக் கையிலேந்தியதும் நாமே. ஆயினும், அவர்களைக் குணமாக்கியது நானே என்பதை அவர்கள் உணராமற் போனார்கள்.பரிவு என்னும் கட்டுகளால் அவர்களைப் பிணைத்து, அன்புக் கயிறுகளால் கட்டி நடத்தி வந்தேன். அவர்கள் கழுத்தின்மேல் இருந்த நுகத்தை அகற்றினேன். அவர்கள் பக்கம் சாய்ந்து உணவு ஊட்டினேன். எப்ராயிமே! நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ரயேலே! உன்னை எப்படிக் கைநெகிழ்வேன்? உன்னை எப்படி அதிமாவைப் போலாக்குவேன்? செபோயிமுக்குச் செய்ததுபோல் உனக்கும் செய்வேனோ? என் உள்ளம் அதை வெறுத்து ஒதுக்குகின்றது, என் இரக்கம் பொங்கி வழிகின்றது.என் சீற்றத்தின் கனலைக் கொட்டமாட்டேன். எப்ராயிமை அழிக்கத் திரும்பிவரமாட்டேன் நான் இறைவன், வெறும் மனிதனல்ல. நானே உங்கள் நடுவிலிருக்கும் தூயவர், ஆதலால், நான் நகர்க்கு எதிராக வரமாட்டேன்.

**பதில்பாடல்:** மீட்பருளும் ஊற்றிலிருந்து நீங்கள் அகமகிழ்வோடு முகந்து கொள்வீர்.

### இரண்டாம் வாசகம் : எபேசியர் 3 : 8 – 12, 14 – 19

கிறிஸ்துவின் அளவற்ற செல்வத்தைப்பற்றிய நற்செய்தியை பிற இனத்தாருக்கு அறிவிக்கவும், எல்லாவற்றையும் படைத்த கடவுளுக்குள் ஊழி காலமாக மறைந்திருந்த இந்த மறைபொருளின் திட்டம் இன்னதென யாவருக்கும் தெளிவுபடுத்தவும், இறைமக்கள் அனைவருள்ளும் மிகவும் கடையவனாகிய எனக்கு இந்த அருள் வழங்கப்பட்டுள்ளது. அதன்மூலம் பலவகையில் விளங்கும் கடவுளின் ஞானத்தை ஆட்சிபுரிவோர், வான்வெளியில் அதிகாரம் செலுத்துவோர் ஆகியோருக்கு இப்போது திருச்சபை வழியாக வெளிப்படுத்த முடிகிறது.இவ்வாறு கடவுள் ஊழி காலமாகக் கொண்டிருந்த திட்டத்தை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாய் நிறைவேற்றினார்.கிறிஸ்துவின் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் வழியாகக் கடவுளை உறுதியான நம்பிக்கையோடு அணுகும் உரிமையும் துணிவும் நமக்குக் கிடைத்துள்ளது.இதன் காரணமாக, விண்ணுலகிலும் மண்ணுலகிலும் உள்ள ஒவ்வொரு குடும்பமும்உண்மையிலேயே குடும்பமாய் விளங்குவதற்குக் காரணமாய் இருக்கிற தந்தையிடம் நான் மண்டியிட்டு வேண்டுகிறேன்.அவருடைய அளவற்ற மாட்சிக்கேற்ப உங்கள் உள்ளத்திற்கு வல்லமையும் ஆற்றலும் தம் தூய ஆவி வழியாகத் தந்தருளுவாராக!நம்பிக்கையின் வழியாக, கிறிஸ்து உங்கள் உள்ளங்களில் குடிகொள்வாராக! அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாய் அமைவதாக!இறைமக்கள் அனைவரோடும் சேர்ந்து கிறிஸ்துவுடைய அன்பின் அகலம், நீளம், உயரம், ஆழம் என்னவென்று உணர்ந்து, அறிவுக்கு எட்டாத இந்த அன்பை அறிந்துகொள்ளும் ஆற்றல் பெறுவீர்களாக!அதன் மூலம் கடவுளின் முழு நிறைவையும் நீங்கள் பெற்றுக்கொள்வீர்களாக!

### நற்செய்தி : யோவான் 19 : 31 - 37

அன்று பாஸ்கா விழாவுக்கு ஏற்பாடு செய்யும் நாள். அடுத்த நாள் ஓய்வு நாளாகவும் பெருநாளாகவும் இருந்தது. எனவே அன்று சிலுவையில் உடல்கள் தொங்கலாகா என்பதற்காகக் கால்களை முறித்துச் சடலங்களை எடுத்துவிடுமாறு யூதர்கள் பிலாத்திடம் கேட்டுக்கொண்டார்கள். ஆகவே படைவீரர் வந்து இயேசுவோடு சிலுவையில் அறையப் பட்டிருந்தவருள் ஒருவனுடைய கால்களை முதலில் முறித்தார்கள்: பின்னர் மற்றவனுடைய கால்களையும் முறித்தார்கள். பின்பு அவர்கள் இயேசுவிடம் வந்தார்கள். அவர் ஏற்கெனவே இறந்து போயிருந்ததைக் கண்டு அவருடைய கால்களை முறிக்கவில்லை. ஆனால் படைவீரருள் ஒருவர் இயேசுவின் விலாவை ஈட்டியால் குத்தினார். உடனே இரத்தமும் தண்ணீரும் வடிந்தன. இதை நேரில் கண்டவரே இதற்குச் சாட்சி. அவரது சான்று உண்மையானதே. அவர் உண்மையையே கூறுகிறார் என்பது அவருக்குத் தெரியும். நீங்களும் நம்ப வேண்டும் என்பதற்காகவே அவர் இதைக் கூறுகிறார்.'எந்த எலும்பும் முறிபடாது' என்னும் மறைநூல் வாக்கு இவ்வாறு நிறைவேறியது. மெலும்'தாங்கள் ஊடுருவக் குத்தியவரை உற்றுநொக்குவார்கள்' என்றும் மறைநூல் கூறுகிறது.

**தியானம்:** அன்பே உருவான கடவுள் தம் உருவில் மனிதனைப் படைத்து, அவனுக்கெனப் பரிசாகத் தாம் படைத்த இந்த பூமியில் அவன் வழியாகத் தமது அன்புக் கடல் பெருக்கெடுத்து ஓடவேண்டும் என அவர் விரும்பினார். கடவுளின் அனைத்துத் திட்டங்களுக்கும் எதிராகச் செயற்படவெனக் கங்கணங் கட்டிநிற்கின்ற தீயவன் மனிதனை தன் வசமாக்கிக் கொண்டான். கடவுளுக்கெதிரான தனது அனைத்துத் திட்டங்களையும் தீயவன் மனிதர்கள் வாயிலாகவே செயற்படுத அன்றே அவன் நமது ஆதித் தாய், தந்தையரிடம் அனுமதி பெற்றுவிட்டான். ஆனால், தமது அன்புப் பிள்ளைகளை தீயவனின் வழிகளிலிருந்து திசைதிருப்பவும், அவர்களை நல்வழிப்படுத்தவும் அவ்வப்போது அவர்களைக் கண்டித்தும், தண்டித்தும் வந்தகடவுள் தமது எல்லையற்ற இரக்கத்தைதம் தேர்ந்து கொண்ட தலைவர்கள், இறைவாக்கினர்கள் வாயிலாக வெளிப்படுத்தி வந்திருக்கின்றார். இதையே நாம் இன்றைய முதல் வாசகத்திலும் வாசிக்கின்றோம். கடவுளின் எல்லையற்ற, இரக்கத்தையே “கிறிஸ்துவின் அளவற்ற செல்வமாகிய நற்செய்தி” என்று புனித பவுல் அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார். ஏனெனில்,கடவுள் மனிதர்கிடையே அனுப்பியவர்களில், இறைமகனாம் இயேசுவே தம் தந்தையின் இரக்கத்தை இவ்வுலகில் வாழ்ந்து காட்டி அந்த வாழ்க்கையையே நமக்குத் தம் தந்தையின் நற்செய்தியாகத் தந்திருக்கின்றார். “கடவுள் நிலையில் இருந்த அவர், அந்தநிலையை விட முடியாத ஒன்றாகப் பற்றிக்கொண்டிராமல்: தம் உயிரையே கொடுக்கு மளவுக்கு மனிதனானார்.” நம்மை மீட்கக் கடவுள் இத்தகைய விலைகொடுப்பதற்கு அவர் நம்மேற்கொண்ட அன்பும் இரக்கமுமே காரணம் என்பது நன்கு புலனாகின்றதல்லவா? சிலுவையிலே தொங்கிய இயேசுவின் உடலம்கூட அதைஊடுருவக் குற்றியனவின் பார்வையைத் திறந்ததென்றால் இதற்குமேல் கடவுளது பேரிரக்கத்தில் நாம் நம்பிக்கைகொள்ளாமல் வாழமுடியுமா?